<u>உதவி அமர்வு நீதிபதி மற்றும் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

முன்னிலை :– திருமதி.J.கிறிஸ்டல் பபிதா எம்.எஸ்.சி., எம்.எல்.,
உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 08 ஆம் நாள் புதன் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 156/ 2016

C.N.R.No. TNTS02-001463-2016

அரசுக்காக :–
காவல் ஆய்வாளர்,
தென்காசி காவல் நிலையம்,
கு.எண் : 535 / 2015 . . . குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

மணிகண்டன், வயது 34/16
த.பெ. மனகாலபெருமாள்
145, மெயின்ரோடு,
பள்ளக்கால் பொதுக்குடி.

. . . எதிரி

இந்த வழக்கானது 22.07.2016 அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.156/2016 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 10.02.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 04.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R.

சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. சின்னதுரைபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (08.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>**

கடந்த 30.11.2015 தேதி இரவு சுமார் 7 மணிக்கு தென்காசி பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் முன்பாக தெற்கேயிருந்து வடக்காக நடந்து போய்க்கொண்டிருக்கும் போது எதிரி புகார்தாரருக்கு பின்னால் வந்து புகார்தாரர் அணிந்திருந்த சுமார் 92 கிராம் எடையுள்ள தங்க செயினை பறிக்கும் போது அதில் சுமார் 70 கிராம் எடையுள்ள செயின் வாதியின் கையில் வந்ததாகவும் மீதி சுமார் 44000/– ரூபாய் மதிப்புள்ள 22 கிராம் எடையுள்ள செயின் எதிரி ஆதாயம் அடையும் நோக்கத்தில் வழிப்பறி செய்ததாகவும், எனவே எதிரி இதச பிரிவு 392 – ன் படி குற்றங்கள் புரிந்துள்ளதாக தென்காசி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரி குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்கள் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் எதிரி மீது இதச பிரிவு 392 – ன் படியான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி

வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அசா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும் சாபொ–1 முதல் சாபொ–3 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–

கடந்த 30.11.2015 ம் தேதி மாலை 6.45 முதல் 7.00 மணியளவில் அசா–1 கிறிஸ்டி என்பவரின் தோழியான ராஜேஸ்வரி என்பவருடன் பேசிக்கொண்டு வெல்காம் ராஜ்கடையை தாண்டி புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலையில் யூனியன் அலுவலகம் அருகில் அசா–1 ன் பின்னால் இருந்து ஒரு நபர் அசா–1 ன் கழுத்தை அடித்துள்ளார். அசா–1 ன் கழுத்துக்கு கீழே கையை வைத்து பிடித்தபோது அசா–1 ன் தாலிச்செயின் பாதி அசா–1 ன் கையில் இருந்துள்ளது. அசா–1 க்கு கழுத்தில் வலி அதிகமாக இருந்ததால் மறுநாள் புகார் மனு அசாஆ–1 கொடுத்துள்ளார்.

6. அசா–8 சிறப்பு உதவி ஆய்வாளர் இராஜேந்திரன் என்பவர் கடந்த 01.12.2015 ம் தேதி 11.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது அசா–1 கிறிஸ்டி என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனு அசாஆ–1 ஐ பெற்று அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அசாஆ–6 பதிவு செய்துள்ளார்.

7. அசா–9 காவல் ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் கடந்த 01.12.2015 ம் தேதி தலைமை காவலர் ராஜேந்திரன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த வழக்கினை உதவி ஆய்வாளர் துரைபாண்டியன் என்பவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் பகல் 12.15 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அசா–3 சுப்பையா பாண்டி, அசா–5 கார்த்திக் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் அசாஆ–7 மற்றும் மாதிரி

வரைபடம் அசாஆ–8 தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அந்த வழக்கு கோப்பினை ஆய்வாளர் 04.06.2016 ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொண்டு விசாரித்தபோது முந்தைய ஆய்வாளர் விசாரித்த சாட்சிகள் அவரிடம் கூறியதுபோல் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சம்பவ இடத்தை பார்வையிட்டபோது ஏற்கனவே தயார் செய்த பார்வை மகஜர், வரைபடம் சரியாக இருந்ததால் ஆய்வாளர் தனியாக தயார் செய்யவில்லை. பின்னர் எதிரியை கைது செய்துள்ளார். எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தான 22 கிராம் அறுந்த நிலையில் காணப்பட்ட செயினை கைப்பற்றி அத்தாட்சி அசாஆ–10 பிறப்பித்துள்ளார். எதிரியையும் சொத்துக்களையும் தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். சொத்தை படிவம் 91 அசாஆ–11 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அறுந்த நிலையில் உள்ள 22 கிராம் எடை கொண்ட தங்க முறுக்கு செயின் ஒன்று அசாபொ–1 ஆகும். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சி கிறிஸ்டி என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

8. எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் படி எதிரிக்கு பாதகமாக உள்ள, சாட்சிகளின் சாட்சியங்களை எடுத்துக் கூறி வினவிய போது எதிரி 'பொய் சாட்சி' என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் 'இல்லை' என்றும் கூறியுள்ளார்.

9. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 392– ன் படியான குற்றசாட்டுகளும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

10. **<u>தீர்வு:–</u>**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரி புகார்தாரருக்கு பின்னால் வந்து புகார்தாரர் அணிந்திருந்த சுமார் 92 கிராம் எடையுள்ள தங்க செயினை பறிக்கும் போது அதில் சுமார் 70 கிராம் எடையுள்ள செயின் வாதியின் கையில் வந்ததாகவும் மீதி சுமார் 44000/– ரூபாய் மதிப்புள்ள 22 கிராம் எடையுள்ள செயினை ஆதாயம் அடையும் நோக்கத்தில் வழிப்பறி செய்ததாகவும், உள்ள இந்த வழக்கானது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

11. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை எனவும், எதிரி இந்த வழக்கில் ஈடுபட்டதாக அரசுத்தரப்பில் தனிநபர் சாட்சியங்கள் எதுவுமில்லை எனவும், அரசுதரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

12. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரி புகார்தாரருக்கு பின்னால் வந்து புகார்தாரர் அணிந்திருந்த சுமார் 92 கிராம் எடையுள்ள தங்க செயினை பறிக்கும் போது அதில் சுமார் 70 கிராம் எடையுள்ள செயின் வாதியின் கையில் வந்ததாகவும் மீதி சுமார் 44000/– ரூபாய் மதிப்புள்ள 22 கிராம் எடையுள்ள செயினை ஆதாயம் அடையும் நோக்கத்தில் வழிப்பறி செய்ததாக கூறப்பட்டு எதிரி மீது இதச பிரிவு 392 –ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

13. அசா–1 கிறிஸ்டி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நாள் தான் தன்னுடைய தோழி ராஜேஸ்வரி என்பவருடன் பேசி கொண்டு செல்லும் போது யூனியன் அலுவலகம் அருகில் தன் பின்னால் இருந்து ஒரு நபர் தன்னுடைய

கழுத்தில் அடித்தார் எனவும் தன்னுடைய முன் கழுத்துக்கு கீழே கை வைத்து பிடித்தபோது தன்னுடைய தாலி செயினை பிடித்து போது தன் கையில் பாதி இருந்தது எனவும் இது சம்பந்தமாக தான் மறுநாள் அசாஆ–1 புகார் மனு கொடுத்ததாகவும் கூறியுள்ளார். அசா–4 ராஜேஸ்வரி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நாள் ஒரு நபர் அசா–1 ன் செயினை பின்னால் இருந்த பிடித்து இழுந்ததாக கூறியுள்ளார்.

14. புலன் விசாரணை அதிகாரி அசா–9 ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் எதிரியை கைது செய்து எதிரியிடமிருந்து 22 கிராம் அறுந்த நிலையில் காணப்பட்ட செயினை சாட்சிகள் மைதீன், சாகுல் ஹமீது ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாக கூறியுள்ளார். அசா–6 மைதீன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது அல்ல என கூறியுள்ளார். அசா–7 சாகுல் ஹமீது என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தில் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது எனவும் அதில் என்ன எழுதி இருந்தது என தனக்கு தெரியாது எனவும் கூறியுள்ளார்.

15. அசா–1 கிறிஸ்டி, அசா–4 ராஜேஸ்வரி ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியங்களில் சம்பவ நாள் அசா–1 யிடம் இருந்து தங்க செயின் பறித்துக் கொண்டது நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்த எதிரி இல்லை என கூறியுள்ளார்கள். எதிரியிடமிருந்து தங்க நகை கைப்பற்றிய போது உடனிருந்ததாக கூறப்பட்டுள்ள அசா–6, அசா–7 ஆகியோர்களும் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு உள்ளதா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

16. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து, அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும்,

எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவு 392 –ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்ப்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து, எதிரியை இதச பிரிவு பிரிவு 392 – ன் படியான குற்றத்திலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 248(1)– ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

18. இவ்வழக்கில் பிஆர் எண் 68/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சாபொ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகைப்படம் ஒன்று. சாபொ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சிடி ஒன்று ஆகியவை இவ்வழக்கு கோப்பில் இணைக்கவும், சாபொ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சுமார் 22 கிராம் எடையுள்ள தங்க முருக்கு செயின் ஒன்றை (அறுந்த நிலையில் உள்ளது) தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 7171/2016 19.07.2016 தேதியிட்ட உத்தரவுபடி கிறிஸ்டி என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 08 ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.09 12:46:51 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திருமதி. கிறிஸ்டி | புகார்தாரர் |
| 2 | திரு. ஷாம்பிரபு | சம்பவ சாட்சி |
| 3 | திரு. சுப்பையாபாண்டி | பார்வை மகஜர் சாட்சி |
| 4 | திருமதி. ராஜேஸ்வரி | சம்பவ சாட்சி |
| 5 | திரு. கார்த்திக் | பார்வை மகஜர் சாட்சி |
| 6 | திரு. மைதீன் | ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி சாட்சி |
| 7 | திரு சாகுல் ஹமீது | ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி சாட்சி |
| 8 | திரு. இராஜேந்திரன் (சிறப்பு உதவி ஆய்வாளர்) | வழக்கு பதிவு செய்த சாட்சி |
| 9 | திரு.பாலமுருகன் (காவல் ஆய்வாளர்) | புலன் விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2. | பார்வை மகஜரில் அசா–3 ன் கையெழுத்து | அ.சா.3 |
| 3. | பார்வை மகஜரில் அசா–5 ன் 2வது கையெழுத்து | அ.சா.5 |
| 4. | ஒப்புதல் வாக்குமூலத்தில் அசா–7 ன் 2வது கையெழுத்து | அ.சா.7 |
| 5. | அத்தாட்சியில் அசா–7 ன் 2 வது கையெழுத்து | அ.சா.7 |
| 6 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| 7 | பார்வை மகஜர் | அ.சா.9 |
| 8 | மாதிரி வரைபடம் | அ.சா.9 |

| | | |
|---|---|---|
| 9 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.9 |
| 10 | அத்தாட்சி | அ.சா.9 |
| 11 | படிவம் 91 | அ.சா.9 |

அரசு தரப்பு சான்று பொருட்கள்:–

| சான்று பொருள் எண் | ஆவணத்தின் / சாட்சிப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1 | புகைப்படம் ஒன்று. | அசா–1 |
| 2 | சிடி ஒன்று. | அசா–1 |
| 3 | சுமார் 22 கிராம் எடையுள்ள முருக்கு செயின் ஒன்று (அறுந்த நிலையில் உள்ளது) | அசா–9 |

எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை
எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள் :– இல்லை

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.09 12:46:58 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

பின் குறிப்பு:–

- ✓ எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.